சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# சுய கற்றல் கையேடு

தரம் - 10

அலகு 4 - இலங்கையின் விவசாயம்

புவியியல்

தயாரிப்பு - ஏ.எஸ்.எப். ஸஸ்னா
(கே/தெஹி/சரஸ்வதி த.ம.வி மியனவிட்ட)

## பகுதி – இலங்கை விலங்கு வேளாண்மை
## மீன்பிடிக் கைத்தொழில்

- இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலில் விருத்திக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள்.
  - இலங்கை சமுத்திரத்தினால் சூழப்பட்ட தீவாகக் காணப்படல்.
  - தீவைச் சுற்றி நீண்ட கடற்கரை காணப்படுதல்.
  - பரந்த கண்டமேடைகளைக் கொண்டிருத்தல்.
  - குடாக்கள், கடல்நீரேரிகள், துறைமுகங்கள் என்பவற்றைக் கொண்டிருத்தல்.
  - ஆறுகள், கால்வாய்கள், அருவிகள், குளங்கள், நீர்தேக்கங்கள் போன்றன காணப்படுத்தல்.
  - பருவக்காற்றுக் காலங்களில் ஏற்படுகின்ற நீர்ரோட்டங்களின் செயற்பாட்டினால் மீன்களின் உணவான பிளாங்ரன் அதிகரித்தல்.

- மீன்பிடிக் கைத்தொழிலின் முக்கியத்துவம்
  - மக்களின் உணவுத் தேவைக்கான புரதத்தை அளிக்கின்றது.
  - மீன்பிடிக் கைத்தொழிலுக்காக பரந்த உள்நாட்டு வெளிநாட்டு சந்தை வாய்ப்பு காணப்படல்.
  - வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகின்றமை.
  - மீன்பிடி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதனால் அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

- மீன்பிடிக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு அவசியமான வளங்கள் காணப்படுகின்றமை.

- இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் 3 பிரிவுகள்.

I. கடல் நீர் மீன்பிடி.

II. நன்னீர் மீன்பிடி.

III. உவர்நீர் மீன் பிடி.

## இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில் இடம்பெறும் பிரதேசங்கள்



- ***வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயத்தில் மீன்பிடித்தல் கடல்நீர் மீன்பிடி என அழைக்கப்படுகின்றது.***

- கடல் நீர் மீன்பிடி 2 வகைப்படும்.
  - கரையோரம் சார்ந்த கடல் அல்லது கண்டமேடையில் இடம்பெறும் மீன்பிடி
  - ஆழ்கடல் மீன்பிடி

***(01) கரையோரம் சார்ந்த மீன்பிடிக் கைத்தொழில்***

***[ஆழமற்ற மீன்பிடிக் கைத்தொழில்]***

- **இலங்கையில் அதிகளவான மீன்பிடி உற்பத்தி கரையோரம் சார்ந்த கடற் பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றது.**

- ஆழமற்ற மீன்பிடிக் கைத்தொழில் பரந்துள்ள பிரதேசங்கள்.
  - மன்னாரிலிருந்து அம்பாந்தோட்டை வரையான கடல் பிரதேசம்.
  - மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான கடல் பிரதேசம்.

- ஆழமற்ற கடலில் மீன்கள் அதிகம் காணப்படுவதற்கான காரணங்கள்.
  - மீனின் உணவாகிய பிளாங்ரன் அதிகம் காணப்படுதல்.
  - ஆறுகள், அருவிகள், கால்வைகளால் கொண்டுவரப்படுகின்ற சேதன உணவுத் துணிக்கைகள் கரையோரப் பகுதிகளில் படிவு செய்யப்படுகின்றமை.
  - சமுத்திர நீரோட்டத்தினால் கடலின் அடியில் உள்ள மீன் உணவு நீரின் மேற்பரப்புக்கு எடுத்துவரப்படுகின்றமை.

- ஆழமற்ற கரையோரப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படும் மீன் இனங்கள்.
  - சாலை
  - அலகொடுவா
  - முல்லவர்
  - சூடை
  - நெத்தலி
  - ஏற்றாவலை
  - ஹீருள்ள

❖ ஆழ்கடல் மீன்பிடியில் அதிகமாக பிடிக்கப்படுகின்ற மீனினங்கள்.

- தலபத்து
- மோரா (சுறா)
- கெலவல்ல
- தோரா
- கொப்ரா
- ரியூனா

❖ ***ஆழ்கடல் மீன்பிடி தனியார் முயற்சிகள் மற்றும் அரச ஆதரவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.***

❖ மீன்பிடி கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்.

- கரவலை
- இழுவை வலை
- பரப்பும் கரையோர வலை
- நீள் வலை
- இயந்திரப் படகு
- நீண்ட நாட்களிற்கான படகு
- தூண்டில்
- முப்பரிமான வலை

***(02) நன்னீர் மீன்பிடி***

❖ நன்னீர் மீன்பிடி நடைபெறும் இடங்கள்.

- குளங்கள்
- ஆறுகள்
- கால்வாய்
- சிறு குளங்கள்
- அருவிகள்

❖ நன்னீர் மீனினங்கள்

- லூலா
- மகுரா
- கொரலியா
- ஹீங்கா
- கனயா
- கவாய்யா
- கொடயா
- மஸ்பெத்தியா

❖ குளங்கள், நீர்தேக்கங்களில் வளர்க்கப்படும் நண்டு இனங்கள்.

- கிராஸ்காப் (Grass carp)
- கட்லா (Catla)
- பிக் ஹெட் காப் (Big head cap)
- ரொகு (Rohu)
- சில்வர்காப் (Silver carp)
- திலாப்பியா (Thilapiya)
- குராமி

- *நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலின் கீழ் மீன் உணவுக்காக  தாவரங்களும், அலங்கார மீன்களும் வளர்க்கப்படுகின்றன.*

*<u>(03)உவர்நீர் மீன்பிடிக் கைத்தொழில்</u>*

- *ஏறக்குறைய 1760 km நீளமான கரையோரத்தின் பல்வேறு இடங்களில் உவர்நீர் மீன்பிடி நடைபெறுகின்றது.*

- உவர்நீர் மீன்பிடி நடைபெறும் இடங்கள்.

  - யாழ்ப்பாணம்
  - முந்தல்
  - நீர்கொழும்பு
  - பொல்வத்த ஆறு
  - புத்தளம்
  - சிலாபம்
  - அறுகம்குடா
  - மலாலா கடனீரேரி

- *கடல்நீர் , நன்னீர் இரண்டும் கலந்த நதிமுகத்துவாரம்  கடனீரேரி என்பன உவர்நீர் மீன்பிடிக்குப்  பொருத்தமான இடங்களாக விளங்குகின்றன.*

- *நீர்கொழும்பு, புத்தளம் போன்ற பகுதிகளில் வர்த்தக ரீதியில் இறாள், நண்டு வளர்க்கப்படுகின்றன.*